**கல்வி அமைச்சு**
**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு**
**மானுடவியல் பிரிவு**
**க.பொ.த (சா.த) முன்னோடி வினாப்பத்திரம் 2016 –**
**புவியியல் (61)**
**வினாப்பத்திரம்- I**

நேரம் 1 மணி.

கவனிக்கவேண்டியவை:-

- ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இப்பத்திரத்திலேயே விடையளியுங்கள்.

- **1 - 10 வரையுள்ள வினாக்களுக்கு இடைவெளிக்குப் பொருத்தமானவிடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து எழுதுக.**

01. புவித் தொகுதியானது பிரதான உபதொகுதிகள் ---------------------------- கொண்டுள்ளது.

( இரண்டினை, மூன்றினை , நான்கினை )

02. இலங்கையில் அதிகளவு பயன்படுத்தப்படும் வலுச்சக்தி மூலமாக ---------------------- குறிப்பிட முடியும்.

( உயிர்சுவடுகள் , நீர் , பெற்றோலியம் )

03. சிறு ஏற்றுமதிப் பயிரான மரமுந்திரிகை உற்பத்தியானது அதிகமாக பரந்து காணப்படும் மாவட்டம் ------------------------------------ ஆகும்.

( கேகாலை , மன்னார் , மாத்தறை )

04. புவியில் காணப்படும் வளங்களுள் -------------------------------------- உயிரற்ற வளமாகக் கருதப்படும்

(பிரிகையாக்கிகள் , காடுகள் , மண் )

05. 1:50000 இட விளக்கப்படங்களின் அகலாங்கு நெட்டாங்கு பெறுமதி காட்டப்பட்டிருப்பது.

-------------------------------------- கோடுகளாகும்.

(**மேல் வட்டம்** , **கீழ் வட்டம்** , உள் எல்லை )

06. ------------------------------- மண் இலங்கையின் ஈரவலயத்தில் சிறு ஏற்றுமதி உற்பத்திக்கு உகந்தது.

( செங்கபில நிற , வண்டல் , செங்கபில லற்றசோல் )

07. வாவியிலிருந்து ஆரம்பிக்கும் ஆறொன்றிக்கு ------------------------------------ உதாரணமாகும்.

( அமேசன் , நைல் , மரேடாலிங் )

08. பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலுடன் தொடர்பான வேறு உற்பத்தியாக அமைவது

-------------------------------------- ஆகும்.

( அழகுசாதனப் பொருட்கள் , பெற்றோல் , மண்ணெண்ணெய் )

09. மூலப்பொருள் இறக்குமதி, வெளிநாட்டு சந்தைவசதி என்பவற்றின் மூலம் --------------------------- மோட்டார்வாகன தொழில் வளர்ச்சியடைந்துள்ளது.

( அவுஸ்ரேலியா , ஐக்கிய இராச்சியம் , யப்பான் )

10. ---------------------------------------------- தீவு அவுஸ்ரேலிய கண்ட மேடையில் அமைந்துள்ள தீவாக குறிப்பிடலாம்.
( போர்னியோ , பப்புவா நியூகினி , மடகஸ்கார் ).

***11. தொடாக்கம் 15 வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவை சரியெனில் 'ச' அடையாளத்தையும் பிழையெனில் 'பி' அடையாளத்தையும் சுற்றி வட்டமிடுக.**

11. இலங்கையில் அதிகளவு நெற் செய்கையில் குருநாகல் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.
( சரி / பிழை)

12. இலங்கையில் தேசிய பூங்காக்களாக ரிடிகல , ஹக்கல என்பன பெயரிடப்பட்டுள்ளன.
( ச / பி )

13. புவியின் உட்பகுதியில் மெக்மா குளிரடைந்து ஒடுங்குவதால் தலையீட்டு தீப்பாறைகள் உருவாகின்றன. ( ச / பி )

14. 1:50000 இட விளக்கப்படத்தில் ஒரு சென்றிமீற்றரினால் 1 கிலோமீற்றரஎன குறிக்கப்படும்.
( ச / பி )

15 சாதாரண வெப்ப நிலை நழுவுவீத செயற்பாடு இடம் பெறுவது மாறன் மண்டலத்திலாகும்.
( ச / பி )

*** 16 -20 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு 'அ' மற்றும் 'ஆ' என இரு பகுதிகள் தரப்பட்டுள்ளன. அவற்றினை இணைப்பதனால் வரும் சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

16. இலங்கை விவசாயத்துடன் இணைந்த உற்பத்திப் பொருட்கள் 'அ' நிரலிலும் அவற்றுடன் தொடர்பான ஆராய்ச்சி நிலையங்கள் 'ஆ' நிரலிலும் காணப்படுகின்றன. ''அ'' ''ஆ'' இரு நிரல்களையும் சரியாக இணைப்பதன் மூலம் கிடைக்கும் பிழையற்ற விடையாவது

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. சிறு ஏற்றுமதிப் பொருட்கள் | A. ஹொரண |
| 2. பழங்கள் | B. லுணுவில |
| 3. நெல் | C. மாத்தளை |
| 4. தென்னை | D. பதலேகொட |

1. DAC**A** 11. CABD 111. CADB 1V. DCBA (…………)

17. இலங்கையின் காட்டுத் தொகுதிக்குரிய **உப**வகைகள் நான்கு ''அ'' தொகுதியிலும் அவற்றுள் செறிவாக வளரும் **தாவர** வகைகள் சில ''ஆ'' தொகுதியிலும் தரப்பட்டுள்ளன. அவற்றை பிழையின்றி இணைப்பதன் மூலம் கிடைக்கும் விடையை தெரிக.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. அயனமண்டல ஈரகாடுகள் | A. **முதிரை,** கருங்காலி , மில்ல |
| 2. மலைநாட்டு ஈரவலயகாடுகள் | B. மகாரத்மல் , அரளு , புளு |
| 3. உலர் கலப்பு என்றும் பசுமையானகாடுகள் | C. சபு , கீன , வல்தெல் |
| 4. மலைநாட்டு உலர்வலய காடுகள் | D. ஹொர , கொடபர , தவட்ட |

(1) DBCA (11) DCAB (111) ACDB (1v) CDAB (……….)

18. 1:50000 இடவிளக்கப் படங்களில் காணக்கூடிய சில பண்புகள் 'அ' தொகுதியிலும் அப் பண்புகளை விளங்கிக் கொள்வதற்கான உரிய சொற்கள் 'ஆ' தொகுதியிலும் தரப்பட்டுள்ளன. "அ" "ஆ" இரு தொகுதிகளை பிழையின்றி இணைப்பதால் கிடைக்கும் சரியான விடையத் **தெரிக.**

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. இடைவெளி அகன்று அமைந்துள்ள சமவுயரக் கோடுகள் | A. பள்ளத்தாக்கு |
| 2. இருஉயர் நிலங்களுக்கிடையில் அமைந்த தாழ்நிலம் | B. குத்துச்சாய்வு |
| 3. மிகநெருங்கிய அமைந்துள்ள சமவுயரக்கோடுகள் | C. மென்சாய்வு |
| 4. கரையோரங்களில் சமுத்திரத்தை நோக்கி நீண்டுள்ள தரைப்பகுதி. | D.முனை |

1. (1) CABD (11) BDAC (111) CADB (1v) DBCA (……….)

19. உலகின் பிரதான மலைத் தொடர் சில 'அ' நிரலிலும் அவை அமைந்துள்ள கண்டங்கள் "ஆ" நிரலிலும் தரப்பட்டுள்ளன. அவற்றை சரியாக இணைப்பதன் மூலம் கிடைக்கும் விடையைத் தெரிக.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. அல்தாய் | A. ஆபிரிக்கா |
| 2. அல்ப்ஸ் | B. ஆசியா |
| 3. அப்பலேச்சியன் | C. ஐரோப்பா |
| 4. டிரக்கன்ஸ் பேர்க் | D. வடஅமெரிக்கா |

1. DABC 11. ADCB 111. BCDA 1V. DACB (………..)

20. உலகின் இயற்கை அழிவுகளில் சூறாவளி முக்கியமாகும். கீழே 'அ' தொகுதியில் சூறாவளி உற்பத்தியாகும் மைய பிரதேசங்கள் தரப்பட்டுள்ளன. 'ஆ' தொகுதியில் அவ்வவ் பிரதேசத்திற்குரிய சூறாவளிகளின் விசேடபெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. "அ" "ஆ" இரு தொகுதிகளையும் சரியாக இணைப்பதனால் கிடைக்கும் சரியான பதிலாவது.

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. கரீபியன் பிரதேசம் | A. விலிவிலிஸ் |
| 2. வங்காள விரிகுடா பிரதேசம் | B. பெகியோ |
| 3. மத்திய பசுபிக் சமுத்திரத்தை அண்மித்த பிரதேசம் | C. சைக்லோன் |
| 4. அவுஸ்திரேலியாவின் வடமேல் கரையோரத்தை அண்டிய பிரதேசம் | D. ஹரிகேன் |

1. DCBA 11. ABCD 111. DCAB 1V. DBAC (………..)

- **21-25 வரையான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களை பயன்படுத்தி வாக்கியங்களை பூரணப்படுத்துக.**

21. இரு நதிகளை வேறுபடுத்தும் எல்லை …………………… எனக் குறிக்கப்படும்.


22. 2012 ஆம் வருடத்தில் உலகில் மோட்டார் வாகானத்தொழிலில் முதன்மை பெற்ற நாடு ……………… ஆகும்.

23. மழையினால் புவிக்கு கிடைக்கும் நீரின் ஒரு பகுதி புவியின் மேற்பகுதியில் வடிந்து ஓடுவதுடன் , அது ……………………….. என கூறப்படும்.

24. வொல்கா நதி பாய்ந்து சென்று ……………….. கடலில் கலக்கிறது.

25. இலங்கையின் சனத்தொகை மிகக் குறைந்த மாவட்டம் ……………… ஆகும்.

- **26 - 28 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்க தரப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்தை பயன்படுத்துக.**





26. சமனலவெவ நீர்மின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ள மாவட்டம் ………………… எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது.

27. விளைவிக்கும் பிரதேசங்களுக்கு ஏற்ப மத்திய மலைநாட்டுத் தேயிலை தொடர்பாக முக்கியத்துவம் பெறும் மாவட்டம் …………… எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது.

28. ஆனவிலுந்தாவ சரணாலயம் ………….. எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மாவட்டத்தில் அமைந்துள்ளது.

- **29 - 30 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்க தரப்பட்டுள்ள வரைபடத்தைப் பயன்படுத்துக.**




29. உல்லாசப் பயணிகளின் வருகை அதிகளவில் காணப்படுவது ………………… வருடத்திலாகும்.

30. குறைந்தளவு உல்லாசப் பணிகளின் வருகையை குறித்துக் காட்டுவது ……………… வருடத்திலாகும்.

- **31 முதல் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியானதை அல்லது மிகப் பொருத்தமானதை தெரிந்து அதற்குரிய இலக்கத்தை முன்னாலுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.**

31. 21 ஆம் நூற்றாண்டுக்காக சூழலும் அபிவிருத்தியும் பற்றிய செயற்றிட்டமொன்றை தயாரிப்பதற்கு முன்மொழிந்த மகாநாடு யாது ?

1. கியோதோ மகாநாடு 11. ரியோ மகாநாடு
111. மொன்றியல் மகாநாடு 1v. வியன்னா மகாநாடு (……...)

32. இலங்கையில் அமைந்துள்ள பிரதான தரைக்கீழ்நீர் வடிநிலப் பிரதேசமாவது.

1. மின்னேரியா 11. வனாத்தவில்லு 111. கவுடுள்ள 1v. நாச்சதூவ (……...)

33. சனத்தொகைப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் பௌதிகக் காரணிகளைக் கொண்ட விடையை மாத்திரம் தெரிக.

1. தொழிற்சாலைகளின் அமைவிடம் , துறைமுகஅமைவு , நீர் வசதி.
11. காலநிலை, உட்கட்டமைப்பு வசதிகள் , மண்.
111. காலநிலை, மண் , நீர் வடிகால்
1v. மண் , நீர் வசதி , உட்கட்டமைப்பு வசதிகள். (………)

❖ முதல் 35 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்காக பின்வரும் கூற்றுக்களை பயன்படுத்துக.

A. சனத்தொகை அதிகரிப்பு வேகம்
B. சிறுவர் சனத்தொகை
C. ஆண் பெண் விகிதம்
D. தங்கியிருப்போரின் சதவீதம்
E. ஊழியப் படை (………)

34. A யின் அதிகரிப்பானது இன்னும் இரு காரணிகளின் அதிகரிப்புக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அவ்விரு கூற்றுக்களையும் குறிக்கும் விடையை தெரிவு செய்க.

1. B யும் D யும் 11. B யும் E யும்
111. C யும் D யும் 1v. C யும் E யும் (………)

35. A யின் குறைவானது இன்னும் இரு காரணிகளின் குறைவுக்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அவ்விரு கூற்றுக்களையும் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.

(1) B யும் C யும் (2) C யும் D யும் (3) B யும் E யும் (4) B யும் D யும்
(………)

36. இலங்கையில் மண்சரிவு அனர்த்தம் அதிகமாக இடம்பெறும் மாவட்டங்களை மாத்திரம் கொண்ட விடையாவது.

(1) கேகாலை , இரத்தினபுரி , நுவரெலியா (2) நுவரெலியா, கேகாலை, குருணாகல்
(3) கேகாலை, நுவரெலியா , கொழும்பு (4) கேகாலை , மாத்தளை , மொனராகலை
(………)

37. உலகில் கடல் மட்டத்திலிருந்து மிக உயரத்தில் அமைந்துள்ள மேட்டு நிலமாவது.

(1) திபெத் (2) பமீர் (3) டெகான் (4) அராபிய (………)

38. இலங்கையின் தெதியவலை பிரதேசம் பின்வருவனவற்றுள் எதற்காக மிகவும் பிரசித்திப் பெற்றுள்ளது ?

(1) களிமண் (2) பந்துக்களி (3) காரீயம் (4) சிலிக்கா மணல்

(………)

39. கோதுமை உற்பத்தி செய்யப்படும் தென்னரைக்கோளத்தின் இரு நாடுகளை உள்ளடக்கிய விடையாவது

1. சீனா , அவுஸ்திரேலியா 11. அவுஸ்திரேலியா , கனடா

111. ஆர்ஜென்டீனா, சீனா 1v. ஆர்ஜென்டீனா , அவுஸ்திரேலியா

(………)

40. வரைபொன்றில் காணப்படவேண்டிய முக்கிய அம்சங்களை மாத்திரம் கொண்ட விடையாவது

(1) தலைப்பு , நிறங்கள் திசை , சட்டகம்

(2) சட்டகம் , நிறங்கள் , திசை , குறியீட்டு விளக்கம்

(3) தலைப்பு , குறியீட்டு விளக்கம் , சட்டகளும் , மூலாதாரம்

(4) குறியீட்டு விளக்கம் , நிறங்கள் , தலைப்பு , மூலாதாரம்

(………)

**கல்வி அமைச்சு**
**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் அலகு**
**மானுடவியல் பிரிவு**
**க.பொ.த முன்னோடி வினாப்பத்திரம் - 2016**
**புவியியல் (61) வினாப்பத்திரம் - II**

நேரம் 2 மணித்தியாலம்

- **பகுதி 1 இன் வினா கட்டாயமாவதுடன் பகுதி 11 இல் 04 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க வேண்டும்.**

**பகுதி 1**

01. (அ) இலங்கையின் 1:50000 இடவிளக்கப் படத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஒருபகுதி உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அப்படத்தினை அடிப்படையாகக் கொண்டு கீழேயுள்ள வினாக்கங்களுக்கு விடையளியுங்கள்.

i. A-B கோட்டினால் காட்டப்படும் தரைத்தோற்ற அம்சமாவது

( குழிவுச்சாய்வு / குவிவுச் சாய்வு / ஓங்கல் சாய்வு )

ii. விளக்கபட பிரதேசத்தின் நீர்வழிந்தோடும் அமைப்பு பொதுவாக திசைமுகப்படுத்தப்பட்டிருப்பது

( வடக்கு நோக்கி / தெற்கு நோக்கி / மேற்கு நோக்கி ) ஆகும்.

iii. படத்தில் இலக்கம் 1 இனால் காட்டப்படுவது.

( திரிகோணகணித நிலையம் / குறிப்பிட்ட நில உயரம் / சமவுயரக் கோட்டின் அளவு)

iv. C - D எனும் கோட்டினால் காட்டப்படுவது யாது?

( நீர் வடிகால் / குளக்கட்டு / பள்ளத்தாக்கு )

v. *பிரதான நதியி*னுடாக அமைந்துள்ள நிர்வாகப் பிரிவு யாது?

( மாகாண எல்லை / மாவட்ட எல்லை / பிரதேச செயலகப் பிரிவு எல்லை )

vi. படத்தின் கிழக்கு எல்லையிலிருந்து சந்தி வரையுள்ள பிரதான வீதி எத்தனை கிலோமீட்டர் நீளமானது ?

vii. படத்தின் வடமேல் காற்பகுதியில் அமைந்துள்ள குடியிருப்பு வகையை இனங்கண்டு பெயரிடுக.

viii. படத்தில் E எழுத்தினால் காட்டப்படும் கலாசார அம்சம் யாது ?

ix. கிழக்கு எல்லையிலுள்ள சதுரத்தினுள் அமைந்துள்ள பொதுச்சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் யாவை ?

x. இப்பிரதேசத்தில் காணப்படும் பிரதான உற்பத்திப் பயிரினைக் கூறுக?

(1 × 10= **10** புள்ளிகள் )

(ஆ) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

i. படத்தில் A,B,C எனக் குறிக்கப்பட்டுள்ள நதிகளில் **மறேடாலிங்** நதியை குறிக்கும் எழுத்து யாது ?

ii. படத்தில் D,E,F எனும் எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள மலைத்தொடர்களில் **ரொக்கிமலைத்** தொடரைக் குறிக்கும் எழுத்து யாது ?

iii. படத்தில் G,H,I எனும் எழுத்துக்களால் குறிக்கபட்டுள்ள நாடுகளுள் **சனத்தொகை அதிகரித்து**க் காணப்படும் நாட்டைக் குறிக்கும் எழுத்து யாது ?

iv. படத்தில் K,L,M எனும் எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள தீவு நாடுகளில் பாற்பண்ணைத் தொழில் நடைபெறும் **நியூசிலாந்து** நாட்டைக் குறிக்கும்


எழுத்து யாது?

v. படத்தில் பெயரிடப்பட்டுள்ள N,O,P எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள வர்தகத்தில் முக்கியதுவம் பெறும் துறைமுகங்களில் **அம்ஸர்டாம்** துறைமுகத்தைக் குறிக்கும் எழுத்து யாது?

(இ) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கை புறவுருவப்படத்தை நன்றாக அவதானித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. படத்தில் A.B.C என குறிக்கப்பட்டுள்ள இடங்களுள் **கொட்டியராகுடா**வை குறிக்கும் எழுத்து யாது ?
2. படத்தில் D,E,F என்று காட்டப்பட்டுள்ள தேயிலை விளைவிக்கும் மாவட்டங்களில் அதிகளவு தேயிலையை பயிர்செய்துள்ள **நுவரேலியா** மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்து யாது ?
3. படத்தில் G.H.I எனும் இடங்களுள் கனியமணல் ( இல்மனைட் ) படிவு காணப்படும் **புல்மோட்டை**யை குறிக்கம் எழுத்து யாது ?
4. படத்தில் J,K,L எனக் எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள பாதுகாப்பு வனங்களுள் **கன்னெலிய**வைக் குறிக்கும் எழுத்தை பெயரிடுக.
5. படத்தில் M,N,O எனும் எழுத்துக்களால் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மீனவத் துறைமுகங்களுள் "**மயிலிட்டி**" துறைமுகத்தை குறிக்கும் எழுத்தைக் குறிப்பிடுக.

பகுதி - 11




2. i. இவ்வுருவப்படத்தில் புவி அமைப்பின் குறுக்கு வெட்டு முகத்தோற்றம் காட்டப்பட்டுள்ளது. இதில் A, B எனும் பகுதிகளை முறையே பெயரிடுக. (2புள்ளி)

ii. உருவப்படத்தில் C எழுத்தால் காட்டப்பட்டுள்ள வலயத்தின் விஷேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. (2புள்ளி)

iii. உருவப்படத்தில் A எழுத்தினால் காட்டப்படும் வலயத்தினுள் நடைபெறும் சூழல் பிரச்சினைகள் இரண்டிணை விளக்குக. (2புள்ளி)

7. கிரமமான வட்டசெயன்முறையில் நடைபெறும் சூழல் செயற்பாடுகள் உடனடியாக ஏற்படுவதால் வளிமண்டல கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களினால் கோள வெப்ப நிலை அதிகரித்து கால நிலையில் மாற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

1. ‘வானிலை மாற்றம் ‘ என்பதனால் குறிப்பிடப்படுவது யாது ? ( 2 புள்ளிகள் )

11. புவிக்கோள வெப்பம் அதிகரிப்பதற்கான

A- மானிட செயற்பாடுகள் இரண்டிணையும்

B- இயற்கை காரணி ஒன்றினையும் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள் )

111. புவிக்கோள வெப்பம் அதிகரிப்பதால் சூழலில் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டிணை விபரிக்குக. ( 5 புள்ளிகள் )

8. 1. ஆசியாவிற்கு அப்பால் நெல்லுற்பத்தி பிரதேசங்கள் இரண்டை அட்டவணையிலிருந்து தெரிந்து எழுதுக.

- மடகஸ்கார்.
- இந்தோனேசியா
- இத்தாலியின் போ நதிப்பள்ளத்தாக்கு
- மியன்மார்
- தாய்லாந்து (2புள்ளி)

11. நெல்லுற்பத்தியை வெற்றிகரமாக மேற்கொள்ள உதவும் சாதகமான பௌதிக காரணிகள் மூன்றினை எழுதுக. (3புள்ளி)

111. தற்கால காலநிலை மாற்றங்கள் நெல் உற்பத்தியில் செல்வாக்குச் செலுத்தியுள்ள வகையை 2 காரணிகளுடாக விளக்குக. (5புள்ளி)

.


புவியியல் II வினாப்பத்திர I பகுதி முதலாம் வினாவிற்கான படத்திலிருந்து
1:50000 இடவிளக்கப பெற்றுக்கொள்ளப்பட்ட ஒருபகுதி




1:50 000

## புவியியல் II முதலாம் வினாவிற்கான (ஆ) பகுதிக்கான உலகப்படம்

(ஆ)



புவியியல் II முதலாம் வினாவிற்கான (இ) பகுதிக்கான இலங்கைப்படம்1.

(இ)

